தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

பகுத்தறிவு!

பகுத்தறி வாலே
சிறந்திடல் வேண்டும்
பாழ் செய்யும் இழிநிலை
துறந்திடல் வேண்டும்
மிகுத்துக் கிடக்கின்ற
மூடப் பழமைகள்
மீளாத் துயரினில்
அமிழ்த்தும் கயமைகள்.

பிறப்பினால் ஒருவனைத்
தாழ்ந்தவன் என்பதும்
பிறிதொரு வனைமிக
உயர்ந்தவன் என்பதும்
அறப் பயன் அறிந்தவர்
அறிவுரை யாமா?
அந்நிலை நீடித்தால்
இழிநிலை போமா?

அண்டங்கள் சுழல்வன
ஆயிரங் கோடி!
அணுவள வும்பிற
ழாமையை நாடிக்
கண்டறிந் திடுதற்கு
முயலவேண் டாமா?
கண்மூடிக் கொண்டதால்
உலகிரு ளாமா?

இந்த உலகமும்
உலகத்தில் உள்ள
எண்ணருங் கோடி
உயிர்களும் மெள்ள
வந்த வகை யென்ன?
காரணம் என்ன?
வாழ்ந்து முடிந்தபின்
எஞ்சுவ தென்ன?

இன்றைய வாழ் வொன்றே
மெய்யென்று கொண்டே
இதுதவிர்த் தனவெல்லாம்
பொய்யென்று விண்டால்
நன்றிவர் அறிவென்று
நகுவதே யல்லால்
நற்பகுத் தறிவென்று
கொள்வரோ சொல்லாய்!

குரல்: 5. இசை: 2, 3

விலை: 25 காசு.

வாய்க்கரிசி.

பா. வே. மாணிக்க நாயக்கர் எனும் பெரியார்
நாநலம் வாய்ந்த நற்றமிழ்ச் செல்வர்;
பொறியியல் வல்லுநர்; புதுமை விளக்கும்
அறிவியல் துறையிலும் ஆயும் பெற்றியர்;
மொழியியல் ஆர்வலர்; முத்தமி ழுக்கொரு
பழியெனின், உள்ளம் பதைக்கும் பான்மையர்;
நெஞ்சுரம் மிக்கவர்; நேர்கொள் பகைவரை
அஞ்சா(து) அவருக்(கு) அறையும் மறவர்;
அருந்தமிழ் ஆய்வும் ஆங்கிலத் தோய்வும்
பொருந்திய புலமையர்; புன்மை விலக்கி
இறைமையில் தோயும் இயல்பினர்; நந்தம்
மறைமலை யடிகளும் போற்றும் மாண்பினர்;

பேரவை யொன்றில் பெருமழை பொழியும்
காரென, நந்தம் கலைவளம் மிக்க
தமிழே ஞாலத் தாய்மொழி யென்பதும்,
இமிழ்கடல் உலகில் இயன்மொழி பலவும்
தண்டமிழ்ச் சொற்பல கொண்டு விளங்கலும்,
விண்டுரை நிகழ்த்திக் கொண்டிருக் குங்கால்,
பிராமணன் ஒருவன் பேதைவாய் மூடி
இராமல் எழுந்துரை செய்வான், ' எங்கே
முன்னைக் கிரேக்க மொழியில் ஒருசொல்
கன்னித் தமிழெனக் காட்டுக பார்ப்போம்!''

இப்படி யவன்தன் ஏளனக் குரலில்
செப்புதல் கேட்ட செந்தமிழ் மறவர்,
"இவர்வாய்க்(கு) அரிசி போடுமின்! உடனே
இவர்க்கு வாய்க்(கு) அரிசி போடுமின்! போடுமின்!''
என்றனர் 'அரிசி' என்னுந் தமிழ்ச்சொல்
சென்று கிரேக்க மொழியில் வழங்கலின்.
அக்குறிப் பறிந்தோர் நகுதலும்
வெட்கிப் பிராமணன் தலைகுனிந் தனனே!

இறைக்குருவன்.

தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும்-அழியாது இருப்பது புகழே!

குரல்-5. | தி.பி. | உ௰௨ | கும்பம்-மேழம்; பெப்-ஏப் 71 | இசை 2-3.

காறி உமிழுங்கள்!

கல்விக் கூடங்களிற் கயமை என்று சொன்னால், அது பலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் இங்கே நாம் சுட்டுவது வெளிப் படையான உண்மை. மாந்தன் நிலா மண்டலத்தில் உலாவருகின்ற இந்நாளிலும் பிறந்த குடியாலும் குலத்தாலும் ஏற்படுத்தப் பெற்ற 'சாதி' அமைப்புகள் இருக்கத்தாஞ் செய்கின்றன. அவற்றுக்குக் காலத்திற் கேற்றவாறு புத்துயிர் ஊட்டியும் புதுப்புனைவு கூட்டியும் வளர்த்து வருகின்ற கூட்டமும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது.

இச்'சாதி'ப் பேயை வீழ்த்துவதற்கு இந்நாட்டுச் சான்றோர் களும், பாவலர் நாவலர்களும் மேற்கொண்ட கிளர்ச்சிகள் புரட்சிகள் முதலிய அனைத்து முயற்சிகளும் ஏமாற்றத்தையே கொடுத்து

வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.

நிற்கின்றன. 'சாதி'ப் பெயரில் இன்றும் புதுப்புதுத் தாளிகைகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன; கழகங்கள் இயங்குகின்றன. 'சாதி' அடிப்படையில் அரசியற் கட்சிகள் ஆரவாரிக்கின்றன; தேர்தல்கள் என்னும் பெயரில் நடைபெறும் 'சாதி' வெறியாட்டங்களுக்கு அளவேயில்லை! இவை மட்டுமோ ? உள்ளமும் உணர்வும் சிறந்திட மாணவர்களை வழி நடத்தவேண்டிய பள்ளி, கல்லூரி முதலிய கல்வி நிறுவனங்களிலும் இச்'சாதி'ப் பேய் தாண்டவமாடுகின்றது.

'சாதி' அடிப்படையில் அரசினர் உதவி ஒருபுறம் கிடக்க, நாடார் உயர்பள்ளி, யாதவர் கல்லூரி என்பன போன்று 'சாதி'யின் பெயரில் கல்வி நிறுவனங்கள் இயங்குகின்றன. அவ்வவற்றில் அவ்வச் 'சாதி' மாணவர்களே பெரும்பான்மையாகச் சேர்க்கப் பெறுவதும், ஆசிரியர்கள் அலுவலர்களும் அவர்களாகவே இருப்பதும் வெளிப்படை. 'சாதி'க் கழகங்கள் தந்தம் 'சாதி' மாணவர்கட்கு மட்டும் பொருளுதவி செய்து வருகின்றன.

அன்றன்றையப் புதுநாகரிகத்திற்கு ஏற்றவாறு ஒழுகையும், உடையும் புதுக்கிக் கொண்டும் முகப்பூச்சு உகிர்ப்பூச்சுகளால் மினுக்கிக் கொண்டும், இன்னோரன்ன பிறவற்றாலும் தன்னிறைவுடன் தலைநிமிர்ந்து நடக்கின்ற மாணவர்கள் இடையிலும் இச்'சாதி' இடம் பெறுவது வெட்கப்படத் தக்கதாகும். மாணவர்கள் 'சாதி'யின் பெயரால் தத்தமக்குள் குழுக்களாகப் பிரிந்து கொள்வதும், கும்மாளமிடுவதும் கலாம் விளைப்பதும், இவற்றுக்கு ஆசிரியன்மார்களும் துணை நிற்பதும் பிறவும் எண்ணின் இந்நாட்டுச் சீர்திருத்தக் காரர்கள், பெரியோர்கள் அனைவர் முகத்திலும் ஒட்டு மொத்தமாகப் பூசப் பெறும் கரிப்பூச் சென்றே கொள்ளக் கிடக்கின்றது.

ஒருபக்கம் அறிவியலும் பிறவும் வானளாவி வளர்ந்து கொண்டிருக்க, இன்னொருபக்கம் மக்களை மாக்களினும் கீழாக்கி வீழ்த்தக் காத்திருக்கும் சாதிப் படுகுழிகளும் ஆழ்ந்தகன்று கொண்டிருக்கின்றன. அருமை இளைஞர்களே! இந்நிலைகளைக் காணின் காறி உமிழுங்கள்!

— இறைக்குருவன்

"இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் றானே !"

— பாவேந்தர்.

உருசியாவில் ...

தொகுப்பு:- மா. பூங்குன்றன்.

* உலகிலேயே மிகப் பெரிய நாடு உருசியா. அதன் பரப்பு 2,24,00,000 சதுர ஆயிரம் சீரடி.

* இது மக்கள் நெருக்கத்தில் சீனுவிற்கும் இந்தியாவிற்கும் அடுத்து மூன்றும் இடத்தைப் பெற்றுள்ளது.

* இந்நாட்டில் நிமையத்திற்கு ஆறுபேர் மேனியாக மக்கள் தொகை வளர்கிறது.

* இங்குப் பதினெட்டு அல்லது அதற்கு மேற்பட்ட அகவை உடையவர்களே திருமணம் செய்து கொள்ளமுடியும். இன்றியமையாச் சில நேரங்களில் நிலைய அதிகாரிகளின் சிறப்பு இசைவு பெற்றுப் பதினெட்டு அகவைக் குட்பட்ட திருமணங்கள் சில நடக்கின்றன.

* அயல் நாட்டவரின் சொத்துகள் இந்நாட்டினருக்கோ அல்லது உள் நாட்டவரின் சொத்து அயல் நாட்டினருக்கோ ஆவணம் மூலம் உரிமையானுல் அதை உரியவர்கள் பெறமுடியும்.

* அயல் நாட்டினர் இந்நாட்டினரை நேசித்தால் திருமணம் செய்து கொள்ளலாம். இவ்வாறு சட்டம் திருத்தப் பெற்றுள்ளது.

* அரசியலிலிருந்து சமயங்கள் அறவே பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றின் உள்முக நடைமுறைகளில் தலையிடுவதோ, பொருள் உதவி யளிப்பதோ யில்லை. அரசினர் பள்ளிகளில் சமயம் கற்பிப்பது இல்லை; நடுநிலை தவறியும் நடப்பதில்லை.

* எவ்வகைச் சான்றிதழ்களிலும், எல்லைக் கடவுகளிலும் எக்குறிப்பிலும் மதம் குறிப்பிடப்படுவதில்லை.

* மதங்களைப் பொதுவுடைமைக் கொள்கை அடிப்படையிலேயே எதிர்ப்பதால் மத நம்பிக்கை உள்ளவரை இக்கட்சி எதிர்க்கிறது.

* பொதுவாக உருசியாவில் வேலைநேரம் ஏழு மணி நேரமே யாகும்.

* இங்குச் சூதாட்டங்கள் நடப்பதில்லை. ஆனுல் குதிரைப் போட்டி விளையாட்டுகளில் மக்கள் பணம் கட்டுகிறுர்கள்.

குட்டிக்கதை

வள்ளுவர் வாய்மொழி.

— கடுங்கோன்.

தண்டமிழ் மறைநூல் தந்த வள் ளுவரைக்
கண்டுரை யாடிக் கருத்தறி வேட்கையின்
ஐவர் சிறுவர் அவரை யணுகி
பையத் தத்தம் ஐயந் தெரித்தனர்.
ஆங்கவர் தமக்கும் அருளுளம் இரங்கிப்
பாங்குறு நன்மொழி பகர்ந்தனர் பாவலர்.
இக்கதை கற்பனை யாயினுஞ் சொல்லுந்
தக்க செய்திகள் கற்பனை யல்ல.

ஒருவன் பெருமான் திருமுன் னின்று
பொருளறி வேட்கையாற் புகலுவான் இவ்வுரை :
''கற்க கற்க என்றெமக்(கு) அறிவுரை
பற்பல கூறும் பண்புசால் பெரியீர் !
கல்வி கற்பது கைப்பொருள் தேடி
நல்ல படியாய் வாழவே யன்றோ ?
முன்னோர் வைத்த தேட்டமே எனக்கும்
இன்னும் ஏழு தலைமுறைக் கும்வரும் !
வருந்திக் கற்றலால் வருவதென் எனக்கு ?
பொருந்த உரைசெய்(து) அருளுமின்'' என்றனன்.
புலவர் பெருமான் புன்னகை யோடும்
நலமுற இக்குறள் நவிலுத லானார்:

''நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு''

(கல்லாதவரிடம் சேர்ந்த செல்வம் கற்றவரிடம் சேர்ந்த வறுமையினும் கொடியதே யாகும்.)

அடுத்தொரு சிறுவன், 'ஐயா! எனக்கும்
எடுத்துரை செய்தல் வேண்டும்; உலகில்
நிலைபெறு புகழ்கொள நீடிய செல்வம்
இலையெனின் கற்ப(து) இன்றியமை யாததே.
எனக்குள செல்வமோ கணக்கிலை! பாவலர்
மனக்களிப் புறபொருள் வாரி வழங்கி,
பாடுபுகழ் கொண்டு பீடுற வாழ்வேன்.
ஏடுபடி கல்வியால் எனக்கீங்(கு) என்பயன்?"
என்றனன். என்றலும், இன்றமிழ் நாவலர்
முன்புபோல் சிறிதே முறுவலித்(து) உரைத்தார்:

"அறிவிலான் நெஞ்சுவந்(து) ஈதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம்."

(புல்லறிவாளன், ஒருவனுக்கு ஒரு பொருளை மன மகிழ்ந்து கொடுத்தல் நேரின் அதற்குக் காரணியம் பெறுகின்றவன் செய்த முன்னை நல்வினையே யன்றி வேறொன்றும் அன்று.)

"மற்றவர் போற்றும் வாழ்க்கையிற் சிறந்தது
கற்றறிந் தீரே கண்டதுண் டோநீர்?"
இன்னொரு சின்னவன் இவ்வா(று) உரைத்து,
பின்னுஞ் சிற்சில பேசுத லுற்றான்:
"மேற்குலத் தேன்யான் மற்றவர் என்றன்
காற்கீழ் வீழும் கடப்பா(டு) உடையர்யான்
காலால் இட்ட ஏவலுந் தலையின்
மேலாச் செய்தோர் மேன்மை யுறுவர்.
இத்தகு சிறப்பினும் ஏற்றம் கல்வியால்
மெத்தவும் வருமோ? விளம்புவீர்!" என்றலும்,
தெய்வப் புலவர் தீந்தமிழ் அண்ணல்
பையச் சிரித்துப் பகருவார் இக்குறள்:

"மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு."

(கல்லாதவர் மேல் வகுப்புகளிற் பிறந்தாராயினும் கீழ் வகுப்புகளிற் பிறந்திருந்துங் கற்றவர்களைப் போல அத்துணைப் பெருமையுடையவ ரல்லர்.)

மற்றொரு சிறுவன் சற்று நெருங்கிக்
"கற்றறி வென்ப(து) ஏட்டுச் சுரைக்காய்
என்றுநம் முன்னோர் இயம்பிய தறிவீர் !
அன்றியும், பண்டை அறிஞர்கள் எல்லாம்
ஏ(டு)எழுத் தாணிகள் ஏந்தியா திரிந்தனர் ?
பாடிப் பிழைக்கும் பாவலர்க்(கு) அல்லால்
கல்விச் சிலம்பங் கைகொடுக் கும்மோ ?
நல்லதும் தீயதும் நாடிச் செய்வதற்(கு)
இயற்கை அறிவே போதுவ தாகச்
செயற்கைக் கல்விவீண் செயலே யன்றோ ?"
என்றலும் வள்ளுவ ஏந்தல் முறுவலோ(டு)
இன்றமிழ்க் குறளொன்(று) இயம்பினர் இனிதே:

"கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்."

(கல்லாதவனுக்கு ஒரோ வழித் தற்செயலாகத் தோன்றும் உயரிய கருத்து மிகச் சிறந்த தாயினும் அறிவுடையார் அவனைப் பாராட்டும் அளவில் அதனை உயர்வாகக் கொள்ளார்.)

இன்னொரு சிறுவன் முன்னால் வந்து
தன் கருத்(து) எடுத்துத் தறுக்கொடு சொல்வான்:
"பேணத் தகுவது மானமே யன்றோ ?
நாணம் இன்றி ஒருவரை நண்ணி,
கைவாய் பொத்தியும் கட்டுப் பட்டும்
மெய்யை வணக்கியும் மேன்மை இழந்தே
இட்ட கட்டளை ஏற்றுச் செய்தும்
பட்டி நாயினும் கீழாய்க் கிடந்து
கற்றல் வேண்டின் கல்வியும் வேண்டேன்
முற்ற முடிந்த(து) ஐயா இதுவே
என்னுடைக் கொள்கை" என்றலும் வள்ளுவர்

பயன் மொழிகள்

1. "யார் வேண்டுமானாலும் சினம் கொள்ளலாம். ஆனால், சரியானவரோடு, சரியான அளவுக்குச் சரியான நேரத்தில், சரியான காரணியத்திற்காகச் சரியான முறையில் சினம் கொள்வது மிகச் சிலராலேயே முடியும்." — அரிசுடாட்டில்.

2. "ஒரு கல்லெடை (டன்)ச் சொற்களைவிட ஒரு விரலிகைச் (அவுன்சு) செயல் மேலானது. — மௌலானா முகம்மது.

3: "நான் சோம்பேறித்தனமாய் இருந்தால் எனக்குப் பித்தம் பிடித்து விடும். அத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போழ்து இறப்பானது நான் தவிர்த்துக் கொள்ள வேண்டிய தீய நஞ்சன்று"
— வயவர் வால்டர் இஃசுகாட்டு.

4. "எளிமைத் தன்மையுடன் இருப்பதே பெரியோர் தன்மை."
— எமர்சன்.

5. "அளவுக்கு மிகுதியான உணவை உண்பது வாழ்க்கையைக் குறுகியதாக ஆக்கிவிடுகின்றது. தேவைக்குச் சிறிது குறைவான உணவை உண்பது அகவையை நீடிக்கின்றது." –கிளைவ் மேக்கே.

6 "சின்னஞ்சிறு தேவையற்ற செலவுகளைப் பற்றிக் கவனமாய் இரு. ஏனெனில் சிறிய ஓட்டை தான் பெரிய கப்பலையும் மூழ்கடித்துவிடும்." — பிராங்கிளின்.

7. "உன்னைப்பிறர் ஏமாற்றாமலிருக்க நீ விரும்பினால் மூன்று கடைகளில் விலையைக் கேட்டறிந்து கொள்" —சீனப்பழமொழி.

8. "தேவையற்ற பொருள்களை வாங்கும் வழக்கமானது முடிவில் தேவையுள்ள பொருள்களை விற்கும் நிலையில் கொண்டு வந்து விட்டுவிடுகிறது."
— பிராங்கிளின்.

தொகுப்பு:- கோ. எழில்மகிழ்நன் (சண்முகானந்தம்)

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

புன்னகை புரிந்து புகன்றனர் ஒருகுறள்:
"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்.
(செல்வர் முன் வறியர்போல் தாமும் ஆசிரியர்முன் ஆசையால் தாழ்ந்து நின்று கல்வி கற்றவரே தலையானவராவர். அங்ஙனம் தாழ்ந்து நிற்றற்கு நாணிக் கல்லாது விட்டவர் என்றுங் கடைப் பட்டவரே.)
வள்ளுவர் வாய்மொழி கேட்ட சிறுவர்கள்
உள்ளந் தெளிவுற்(று) உவகையின் மகிழ்ந்து
கல்வியிற் பெரியார் வள்ளுவர்
நல்லடி போற்றிச் செல்லலுற் றனரே!

தெரிந்து கொள்ளுங்கள்.

* முதன்முதல் 'ஒலிம்பிக்கு' விளையாட்டுப் போட்டிகள் தி. பி. 1923-இல் நடந்தன.

* தொடர்ந்து ஆண்டுதோறும் நடந்துவந்த ஒலிம்பிக்குப் போட்டிகள் தி. பி 1943, 1971, 1975. ஆகிய ஆண்டுகளில் நடைபெறவில்லை. ஏனெனில், அவ்வாண்டுகளில் தாம் உலகப்போர்கள் நிகழ்ந்தன.

* தலைமுடியிலிருந்து பயிர்கட்காகும் ஊட்டமுள்ள உரம் செய்யலாமென ஓர் அறிவியல் ஆய்வு கூறுகிறது.

* அயோடின் என்ற சத்து உடலில் குறைந்தால், முகத்தில் வறட்சியும், சுருக்கங்களும் ஏற்படுகின்றன. இச்சத்து கடற்காற்றிலும், கடல் மீன்களிலும் மிகுதியாக உள்ளன.

* பண்டுதொட்டே சப்பானியர்கள், தம் மூதாதையரை வணங்கி வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருப்பது, நம்மவர் தம் வழக்கத்தைப் பின்பற்றுகிற தன்மையைத் தெளிவுபடுத்துகிறது.

* இன்றைக்குச் சப்பானுக்கு அடுத்தபடியாக உழைப்பால் தொழில் துறையில் முன்னேறியுள்ள நாடு, இசுரேல்.

* சூப்பியன், எனும் சுறுமீனின் கல்லீரலில் இருபது சீர்க்குடுவை நெய் உள்ளது. இதில் ஊட்டச் சத்து நிறைந்துள்ளது.

* பிறந்த குழவியின் கட்புலனின் திறன், நல்நிலையுடைய ஒரு மாந்தனின் கட்புலனது திறனில் நூற்றில் ஒரு பகுதி.

* உலகிலேயே சிறந்த அமைப்பைக் கொண்டுள்ள நீளமான பாலம் கனடாவில் உள்ள 'நியூப்புரான்சுவிக்கு'வில் உள்ள ஆர்த்திலாந்து அருகிலுள்ளது. இது மூடப்பட்ட அமைப்புடையது.

* ஆசுத்திரியாவில், எட்டாம் நூற்றுண்டுக் காலத்திய இலத்தீன் மொழியில் எழுதப்பட்டுள்ள ஒரு பொத்தகம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

* சவக்கடலின் (Dead Sea) நீர்மட்டத்துக்கும் கீழே 1300 அடி தாழ்வாய், ஓர் உணவு விடுதி, சுற்றுலா விடுதி ஆகியனவும், ஓர் அஞ்சல் நிலையமும் முறையே சோர்தானிலும், இசுரேலிலும் உள்ளன.

— புலவர். சேயிளங்கண்ணன்.

பெரியோர் கதை!

"தாமசு ஆல்வா எடிசன்"

— இளமுருகன்.

செந்தமிழ்ச் சிட்டுகளே ! தம்பிகளே ! தங்கைகளே !

விலங்கிலிருந்தே இலங்குபுகழ் மாந்தன் பிறந்தான் என்பது அறிஞர் ''தார்வின்'' கண்ட கூர்தலறக் கொள்கையாகும். பிறந்திட்ட மாந்தனுக்குச் சின்னாட்களுக்குப் பின் இயற்கையின் இயல்புகள் தெரிந்தன. முன்னம் இயற்கையை வணங்கினான் வியப்பால்! அச்சத்தால்! பின்னை நாள் அவ்வியற்கையையே ஆய்ந்தறிய முற்பட்டான். அறிஞர் பலர் தோன்றினர். பலப்பல புதிய கருத்துகள் தலையெடுத்தன. விளங்காதனவெல்லாம் விளங்கின. மாந்தன் மலரும் தனது வாழ்வுக்கு அவை பயன்படும் நிலைகளை எண்ணலானான். விளைந்தது புத்துலகம்.

அறிஞர் பெஞ்சமின் பிராங்கிளின், வண்ண முகிற்கூட்டம் முட்டிடும்போது மின்னல் ஒளி தோன்றி, இடியோசையுடன் மின் விசையும் தோன்றுமெனக் காட்டினார். அறிஞர் 'மைக்கேல் பாரடே' கம்பிச்சுருளின் அருகே ஒரு காந்தத்தை அசைத்தால் மின்விசையைப் பெறலாமென நாட்டினார். அறிஞர் அலெக்சாந்தர் வோல்ட்டா உலகின் முதல் மின்கலத்தை அமைத்து மின்னியலிற்கு உயிர் ஊட்டினார். கண்டறியப்பெற்ற மின் விசையைக் கொண்டு நமது நடைமுறை வாழ்வுக்குப் பயன்தரும் பல கருவிகளையும் பொருள்களையும் கண்டவர் அமெரிக்க நாட்டு ஆய்வறிஞர் தாமசு ஆல்வா எடிசன். பூத்திருக்கும் வண்ணமலர்களில் காத்திருக்கும் நறுந்தேனைச் சேர்த்திழுக்கும் கருந்தும்பியது போல, பலவிடங்களிலுமுள்ள பல்துறை அறிஞர்கள் ஆய்ந்தளித்த அறிவியல் முடிபுகளைத் தெரிந்து தெளிந்திடுவது நமது கடன். எனவே ஏற்றம் தரும் படைப்புகளைத்

தந்த பெருமகன் எடிசனின் வாழ்வினை அறிந்திடுவோம். அறிவியல் துறை தேர்ந்திடுவோம்.

1847–ஆம் ஆண்டு பிப்பிரவரித் திங்கள் பதினோராம் நாள் அமெரிக்க ஒன்றிய நாட்டில் 'மிலான்' நகரில் சிறுவணிகர் ஒருவருக்கு மகவாகத் தோன்றினர். சின்னாட்களில் எடிசனின் தந்தை தமது குடும்பத்தாருடன் 'மிலான்' நகர்விடுத்துப் 'போர்ட்டுகுரான்' எனும் நகரை அடைந்தார். எடிசனின் பள்ளி வாழ்வு அங்கேதான் தொடங்கியது. விளையும் பயிர் முளையிலேயே தெரியுமென்பது முதுமொழி. அதற்கிணங்க எடிசன் இளமையிலேயே தாம் செய்யும் செயல்களைத் திருத்தமுடனும், ஊக்கமுடனும் செய்துவந்தார். இவரது தந்தை உட்படப் பிறர் இவரது நுண்ணறிவுத் திறம் காணாத நிலையில் இவர் அன்னை தம் மகனது அறிவுநிலையைத் தெளிந்து கொண்டார். எனவே மகனுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டித், தானே கற்றுப் பொருளுணர் தலையும், தானே பொருள்களை ஆக்க வல்ல நிலைகளையும் காட்டி, நல்ல அறிவியல் அறிவையும் புகட்டி விட்டார். தமது சிறிய அறையில் தமது செலவுக்கெனத் தரப்படும் குறைந்த தொகையையும் வேதியற் பொருள்கள் வாங்கி ஆய்வு நடத்தினர். பின்னர் குரான் நகருக்கும், தெட்டுராய்டு நகருக்கும் இடையில் ஓடும் தொடர்வண்டியில் செய்தித்தாள் விற்கலானர். தெட்டுராய்டு நகரின் பொது நூலகத்திலிருந்து பலநூல்களை எடுத்துக் கற்றுத் தமது அறிவைக் கூர்மையாக்கிக் கொண்டார். ஆய்வகமும் நூலகமுமே அந்நாட்களில் அவருக்குப் புகலிடமளித்தன. தொடர் வண்டியில் கடந்து செல்லும் காலத்தைப் பயனுள்ளதாக்கத் தமது ஆய்வைத் தொடர் வண்டியிலேயே நடத்தினர். ஒருநாள் 'எரியம்' எனும் தனிமம் தவறிப் பெட்டியில் வீழ, உடனே தீப்பற்றிக் கொண்டது. தீ உடனே அணைக்கப்பட்டாலும், வண்டிக்காவலர் எடிசனிடம் மிகவும் கடுமையாகவும் கொடுமையாகவும் நடந்து அவர் கன்னத்தில் விசையுடன் அறைந்துவிட்டார். இதனல் எடிசன் ஒருகாதின் கேட்கும் தன்மையை இழந்து விட்டார். பின்னர் 'எரால்டு கிழமை ஏடு' எனும் பெயரில் தாமே ஒரு தாளிகையைத் தொடங்கினர். தமது வீட்டிலும் ஒரு காய்கறிக் கடையைத் திறந்–தார். இவ்வாருக இளம் பருவத்திலேயே வணிகத்திலும் தாளிகைத் துறையிலும் அறிவியலிலும் நல்ல தேர்ச்சியுற்றிருந்தார்.

தொடர் வண்டியாலுண்டாகவிருந்த இடரொன்றிலிருந்து ஒரு குழந்தையைக் காத்தமைக்காக, அக்குழந்தையின் தந்தை எடிசனுக்குத் தொலைவரிப்பொறி இயக்கும் முறையைச் சம்பளம் பெறுமலேயே கற்பித்தார். கற்றபின் எல்லைப்புறப் பகுதியில் இராக்காலத் தொலைவரிப் பொறியாளர் பணி இவருக்குக் கிடைத்தது. இரவில் கண்விழிப்பது துன்பமாக இருந்ததால், இதைத் தவிர்க்க ஒரு பொறியை உருவாக்கினுர். இராக்காலத்தில் இவர் உறங்கும் போது, இவரது விழிப்புத் தன்மையை அறியும் வண்ணம் ஆய்வு அழைப்பு வந்தால் அப்பொறி தானே தக்க விடையிறுத்துவிடும். கேள்வி, வழக்கமான முறையைவிட்டு மாற்றிக் கேட்கப்பட்டால் பொறி விடையிறுக்காது. எனவே ஒருநாள் இந்நடப்பு கண்டுபிடிக்கப்பட்டதால் எடிசன் அந்த வேலையை விடவேண்டியதாயிற்று. ஐந்தாண்டுகளுக்குப் பின் தொலைவரித் துறையில் நன்கு தேர்ந்துவிட்ட இவருக்குப் பாசுட்டன் நகரில் ஒரு பெரிய நிறுவனத்தில் தொலைவரிப் பொறியாளர் வேலை கிடைத்தது. இப்பணியிலிருந்து கொண்டே ஆய்வு நடத்தினுர். "மின் ஒப்போலைப் பதிவுப் பொறி'யினைக் கண்டார். ஆனுல் அரசியல் துறையோர்க்கு அது மிகுந்த பயனளிக்கவில்லை. தளர்ந்த மனத்துடன் 'நியூயார்க்கு நகரை அடைந்தார், அங்குப் பணியிலிருந்து கொண்டே' தானே அச்சடிக்கும் தொலைவரிப் பொறியினைக் கண்டுபிடித்தார். அப்பொறி சரக்கிருப்பு வெளியீட்டகத்திற்கு மிகுந்த பயனளிப்பதாயிருந்தது. (Stock exchange). எனவே இதன்மூலம் நாற்பதாயிரம் (40000) தாலர் பொருள் பெற்றுர். மென்லோ பருக்கு என்னுமிடத்தில் ஓர் ஆய்வகத்தை நிறுவித், தமது ஆய்வைத் தொடர்ந்தார். அறிவியல் புதுமைகளை, உலகிற்களித்த எடிசனை மக்கள் 'மென்லோ பருக்கின் ஏவல் வைப்பு மந்திரக்காரனென்று வேடிக்கையாக அழைத்தனர். புகழ் பரவத்தொங்கியஉடன் மணம் இவரை நாடிவர, இவரும் மன நாட்டத்துடன் மங்கை நல்லாளொருத்தியை மணம் செய்து கொண்டார். மணவாழ்வும் மணம் கமழ்ந்தது. சின்னுட்களில், பன்னுட்கள் இவருடன் வாழ்ந்த நிறைவை அளித்துவிட்டு இவர் துணைவியார் இவரைத் துணையின்றி விட்டு உயிர்துறந்தார். பின்னர் இவர் மறுமணம் செய்துகொண்டார். பற்பல படைப்புகளை உலகிற்களித்தார். எல்லாரிடமும் அன்புடனும் கூட்டுணர்வுடனும் கலந்து பழகிய இவர் 'தமது எண்பத்து ஐந்தாம்' அகவையில்

1931ஆம் ஆண்டு ஆகஃசுடுத்திங்கள் முதல்நாள் புகழுடம் பெய்தினர். "தொலைவரித் துறையில் ஒரே நேரத்தில் ஒரு கம்பியின் வழியாகப் பல செய்திகளை விடுக்க வழிசெய்தார். 'இரமிங்கடன்' தட்டெழுத்துப் பொறியினைச் செப்பனிட்டார். 'அலெக்சாந்தர் கிரகாம்பெல்' அமைத்த தொலைபேசிக் கருவியில் பல மாறுதல்களைச் செய்து பிற கண்டங்களில் வாழும் மக்களுடன் நேரடியாகப் பேசவும் வகைசெய்தார். இவரது மிகச்சிறந்த கண்டுபிடிப்பு. இன்றைய இசை வழங்கும் பெட்டியின் முன்னோடியான ஒலிவரைவு (Phonograph)ப் பெட்டியை அமைத்ததுதான்.

ஒருநாள் தமது ஆய்வகத்தில் துணையாளர் ஒருவரிடம் ஒரு மாதிரிப்படம் கொடுத்துப் படத்தில் கண்டபடி ஒரு பொறியமைக்கப் பணித்தார். அமைக்கப்பட்ட அப்பொறியில் ஒரு குழாயும் ஒரு உருளை வடிவப் பாண்டமும் பிற அமைப்புகளும் இருந்தன. ஒரு மெல்லிய தகர ஏட்டினை உருளையிற் சுற்றிப் பின் குழாயில் "மேரி ஒரு சிறு விளக்கைப் பெற்றிருந்தாள்" என்று ஆங்கிலத்தில் கூறிக் கொண்டே கைப்பிடியின் உதவியினால் உருளையைச் சுற்றிக்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் இவர் கூறிய அதே சொற்றொடர் பொறியிலிருந்து திரும்பவும் ஒலிக்கப்பெற்றது. இம்முயற்சியே பின்னர் இசை (அல்லது ஒலி) வழங்கிப் பெட்டி அமைக்க உதவிற்று.

மின் விளக்கினை அமைப்பதில் மிகவும் அறிவாற்றலைச் செலவிட்டார். நீண்ட நாள் ஆய்விற்குப்பின் 1879 ஆம் ஆண்டு உலகின் முதல் கரியிழையினைக் கொண்ட மின் விளக்கினை அமைத்தார். இம்முயற்சியில் இவர் செலவிட்ட தொகை ஏறத்தாழ நாற்பதாயிரம் (40000) தாலர்கள். 1882 ஆம் ஆண்டு வாக்கில் உலகின் முதல் மின் பெருக்கு நிலையத்தை (Power Station) இலண்டன் மாநகரில் தோற்றுவித்தார். பின்னர் 'நியூயார்க்கு' நகரிலும் அதே அமைப்பை உருவாக்கினர். இதன் மூலமே இல்லங்களுக்கு மின் விசை கிடைத்தது. நீண்ட நாள் ஆய்விற்குப்பின் திரைப்படம் காட்டும் பொறியுடன் ஒலிப்பதியும் பொறியையும் இணைத்து உலகின் முதல் பேசும் திரைப்படம் உருவாக்க வழிசெய்தார். தாளிகையாளர் இவர் ஆய்வகத்தை எப்போதும் சூழ்ந்திருப்பர். மக்கள் இவரது புதிய படைப்புகளைக் காண ஆவலுடன் காத்திருந்தனர். நூற்றிற்கு மேற்பட்ட பணியாளர்கள் இவரிடம் பணியாற்றினர். அவர்களுடன் அன்புடன்

பழகிக் கூட்டுணர்வுடன் செயல்படச் செய்தார். இவர் கரவற்ற வெள்ளை மனத்தினர். ஊன்றி ஆய்ந்தறியும் தன்மை கொண்டவர் பலநாட்கள் பல வேளை உணவை மறந்து உண்டுவிட்ட எண்ணத்துடன் ஆய்வகத்தில் ஆய்வு நடத்தினர். எடுத்த செயலை முடிக்குமுன் உணவு, உறைவிடத்தினைப்பற்றி இவர் கவலையுறுவதில்லை. இலண்டன் மாநகரில் நிலத்தடிச் சுரங்கத்தில் பணியாற்றிய போது ஓர் இரவு அந்தச் சுரங்கத்திலேயே இருசெங்கல்லைத் தலையணையாகக் கொண்டு உறங்கினர். “நுண்ணறிவு பெறுவதற்கு இரண்டு விழுக்காடு உள்ளுணர்வும் தொண்ணூற்றெட்டு விழுக்காடு உடலுழைப்பும் தேவை” என்று கூறுவார். அவர் வழி நடந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் நன்மக்களாகத் திகழ நமக்குத் திருவருள் என்றும் துணை செய்யட்டும். 0

ஏன்? ஏன்? ஏன்?

— வை. பூ. மதியழகன் (சோமசுந்தரம்)

1. குழந்தை நீண்ட நேரம் தூங்குவது ஏன்?
2. எரிகின்ற சுடரின் நாக்கு மேல்நோக்கியே இருப்பது ஏன்?
3. இடிஇடிப்பதால் மின்னல் ஏற்படுகிறது. இரண்டும் ஒரே சமயத்தில் தோன்றினாலும் முதலில் மின்னலைப் பார்க்கிறோம். இடிஒலியைச் சிறிது நேரம் கழித்துதான் கேட்கிறோம்-ஏன்?
4. பனிக்கட்டி நீரில் மிதக்கும் — ஏன்?
5. மாந்தர்கள் கண் இமைப்பது ஏன்?
6. நீரில் உப்பைப் போட்டவுடன் கரைகிறது — மறைந்து போகிறது — ஏன்?
7. நீரைச் சுடவைக்கும் போது காற்றுக்குமிழி வருகிறது—ஏன்?
8. ஓர் ஆண்டில் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் சில பறவையினங்கள் சிலயிடங்களில் காணப்பெறுகின்றன. பிற சமயங்களில் காணப்பெறுவதில்லை — ஏன்?
9. நம் உடம்பில் காணப்பெறும் மயிர்களை வெட்டினால் வலிப்பதில்லை; இழுத்தால் வலிக்கிறது — ஏன்?
10. புதிய மண்பானையில் விட்டு வைத்த நீர் குளிர்ச்சியாக உள்ளது. பழைய மண்பானையில் ஊற்றி வைத்த நீர் குளிர்ச்சியாக இருப்பதில்லை—ஏன்? (விடை: 15ஆம் பக்.)

தூய்மையும் வாய்மையும்.

—த. அன்பழகன்.

மகன் : அம்மா, அம்மா ! கழுத்துப் பக்கம்
சும்மா சும்மா அரிப்பெடுக் கின்றதே ?
தாய் : ஆடையில், கழுத்தில் அழுக்கடைந் திருக்கும் !
மகன் : உகிர் நுனி ஓயாது ஊறு கின்றதே ?
தாய் : வகையாய்ச் சீவாது வதியும் அழுக்கே !
மகன் : இழுவைச் செருப்பும் கழுதையாய்க் கடிப்பது ?
தாய் : புழுதிசேர்ந் திருக்கும், புகைபடிந் தாற்போல் !
மகன் : தலையரிப் பெடுப்பது ?
தாய் : குளியாத தால்தான்.
மகன் : வயிற்று வலிநோய் வருவதே னம்மா ?
தாய் : வயிற்றுள் அழுக்குகள் கழியாது வதிவதால்.
மகன் : கை, கால் உளைந்து கடுப்பது எதற்கு ?
தாய் : மெய்யுள் அழுக்குவளி மேவுத லால்தான்.
மகன் : காய்ச்சல் வருவது ?
தாய் : கரணியம் அழுக்கே !
மகன் : அண்டை வீட்டில் சண்டையே னம்மா ?
தாய் : அழுக்குத் தானடா ?
மகன் : அதற்குமா அழுக்கு ?
தாய் : பொய்யும் ஆசையும் பொறாமைப் பேயும்
வெய்ய சினமும் வேறெவை ? அழுக்கே !
அவைதாம் மனத்தை அனலாய் எரிப்பன !
அவைதாம் சண்டைக்கு நிலையாய் இருப்பன !
மகன் : எப்படி யம்மா ?
தாய் : அப்படிக் கேளடா :
"அப்பா எனக்கோர் அறிவியற் சுவடி
இப்போது வேண்டும்" என்பான், பையன்.
"போ, போ ! பெரிய பொல்லாத படிப்பு !
நாளைவாங் கிக்கொள்" என்பார், தந்தை.
காசு கொடுத் திட்டுக் கடைசியில் ஓர்நாள்
ஆசிரி யர்வழி அறிவார் அவரே
'பேசும் படத்திற் காசைப் பட்டுப்

பேசினுன் பிள்ளை பெரும்பொய்' என்றே.
வீசிடும் சண்டைப் புயலும் விரைந்தே.

அடுத்த வீட்டாள் அல்லிக் கொடியாள்
உடுத்த புடவையின் ஒருநாள் மினுக்கை
மனத்துள் பொருத மனைவி, கணவனைத்
தனக்கும் அதைப்போல் வாங்கித் தருமாறு
நச்சரிக்கு செய்வாள்; நல்ல சொல்லி
மட்டந் தட்டா மடமைக் கணவன்
சினப்பான்; ''கழுதை! செருப்பெடுப் பேன்'' என
உதிர்ப்பான் சிலசொல்; உடனே சண்டைக்கு
எதிரெழு வாள்மனை யாட்டி இரைந்தே,

அதனுல் தானடா நந்தமிழ் அறிஞர்
பதமொடு பாடுவர் என்றும்
'உள்ளும் புறமும் தூய்மைகொள்' என்றே.

> ''புறந்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை
> வாய்மையாற் காணப் படும்.''
>
> — பெருநாவலர்.

"ஏன்?..." — விடை.

1. குழந்தையின் உடம்பு வளரவேண்டியிருக்கிறது. உயிரணுக்கள் மிக வேகமாகப் பிரிதலடைந்து, கொண்டு இருக்கின்றன. அதனுல் கழிவுப்பொருள் மிகுதியும் உண்டாகிறது. ஆகவே சோர்வும் உண்டாகிறது. நீண்டநேரம் ஓய்வெடுத்தால்தான் கழிவுப்பொருளை நுண் தசைகளிலிருந்து அகற்றமுடியும்.

2. சுடர் வெப்பமானது; சூடான காற்றினை வெளிவிடுகிறது. சூடாக உள்ளவை சுற்றுப்புறக் காற்றை விட இலேசாக இருக்கும்; எனவே சுடர் மேல்நோக்கியே இருக்கும்.

3. ஒளியின் வேகம் மிகுதி. ஒலியின் வேகம் குறைவு. ஒலி நொடிக்கு ஓரிலக்கத்து எண்பத்தாறுயிரம் கல் விரைவில் செல்லும். ஒலி நொடிக்கு 1100 அடிவேகத்தில்தான் செல்லும் ஒளி வேகமாகச் செல்வதால் மின்னலை முதலில் பார்க்கிறோம். இடியொலியைப் பின்னரே கேட்கிறோம்.

4. பனிக்கட்டியின் கனஅளவு உள்ள தண்ணீரின் எடையைவிட பனிக்கட்டியின் எடை குறைவு. அதனுல் பனிக்கட்டி நீரில் மிதக்கிறது.

5. கண்ணின் பகுதியில் காற்றிலுள்ள மிகச் சிறிய தூசுகள் பட்டுக்கொண்டே இருக்கும். இமைகள் ஒவ்வொரு முறை இமைக்கும் போதும் அவை துடைக்கப்பெறுகின்றன. இதற்குக் கண்ணீர்ச் சுரப்பி சுரக்கும் நீர் உதவுகிறது.

6. நீரின் மிகச்சிறிய அணுக்களுக்கிடையில் மிகச்சிறிய இடைவெளிகள் உள்ளன. உப்பின் அணுக்கள் அவற்றின் இடையில் போய்த் தங்கிக்கொள்கின்றன. அதனையே கரைகிறது என்கிறோம்.

7. தண்ணீரின் இம்மிகளுக்கிடையிலுள்ள இடைவெளிகளில் காற்று உள்ளது. சுடவைக்கும் போது நீரின் இம்மிகள் விரிகின்றன. அதனால் காற்று வெளியேற்றப்படுகிறது. ஆகவே காற்றுக் குமிழிகள் வெளிவருகின்றன.

8. ஓர் ஆண்டில் குறிப்பிட்ட வேளைகளில், உலகின் சில பகுதிகளில் பருவநிலை நன்றாக இராது. அப்போது அவ்விடங்களிலுள்ள பறவைகள் உலகில் பருவநிலை நன்றாக உள்ள பகுதிகளுக்கு வரும்.பின் சிறிது காலங்கழித்துத் தம் தாயகத்திற்கே திரும்பிச் சென்றுவிடும். இவ்வாறு அவற்றின் வாழ்வில் நிகழும் இந்த நிகழ்ச்சி "பறவைகளின் இடப்பெயர்ச்சி" (Migration of birds) என்று கூறப்பெறும். இஃது எவ்வாறு மாறி, மாறி ஒழுங்காக நடைபெறுகிறது என்பது அறிவியலறிஞர்கட்கும் ஒரு பெரும் புதிராகவே உள்ளது.

9. மயிர்களில் உணர்ச்சி நரம்புகள் இல்லை. இவற்றின் குழிகளில் உணர்ச்சி நரம்புகள் உள. இவற்றை இழுக்கும்போது குழிகளில் இணைந்துள்ள நரம்புகள் இழுபடுவதால் நாம் வலியை உணர்கிறோம்.

10. புதிய மண்பானையில் மிகச்சிறிய துளைகள் உள. அவற்றின் வழி நீர் கசிந்து மண்பானையின் வெளிப்புறத்தில் காணப்பெறும். கசிந்துவந்த நீர் ஆவியாகும். அப்போது அது மண்பானையின் வெப்பத்தை எடுத்துக் கொண்டு ஆவியாகும். இதனால் பானையிலுள்ள நீரின் வெப்பமும் குறையும். நீர் குளிர்ச்சியாக இருக்கும்.

பழைய மண்பானையில் மிகச்சிறிய துளைகள் அடைபட்டுப்போகும். நீர் கசிந்துகசிந்து வந்து அதிலுள்ள மண் துகள்கள், துளைகளைக், காலப்போக்கில் அடைத்திருக்கும். அதனால் வெளிப்புறம் நீர் கசிந்து வராது. பானையில் உள்ள நீரும் குளிர்ச்சியாக இராது.

சொல் வளம்.

(சிறுமை, இளமை — இவற்றைக் குறிக்கும் முன்னொட்டுச் சொற்களும் இவற்றுக் குரிய எடுத்துக் காட்டுகளும்.)

சிறுமையைக் குறித்து வருவன :-

முன்னொட்டு:	எடுத்துக்காட்டு :
அரி	அரிநெல்லி, அரிக்குரல்
அரிசி	அரிசிப்பல், அரிசிக்களா
அரை	அரைத்தவளை
உமி	உமித் தூறல்
ஊசி	ஊசி மிளகாய், ஊசித்தொண்டை, ஊசி வெடி
எலி	எலியாமணக்கு
கண்	கண்விறகு
கதலி	கதலி வாழை
கிளி	கிளியஞ்சிட்டி, கிளிவாய்தல்
குட்டி	குட்டித் தக்காளி, குட்டிப்பல்.
குருவி	குருவித்தலை, குருவித்தேங்காய்.
குள்ளம்	குள்ளநரி
குறு	குறுநொய், குற்றில்–குச்சில்
கை	கைக்குட்டை, கைந்நாழி
சல்லி	சல்லிவேர், சல்லிக்காசு
சிட்டு	சிட்டுக்குருவி
சில்	சில்லுக் கருப்புக்கட்டி
சிறியாள்	சிறியாள் நங்கை
சிறு	சிறுமணி, சிற்றெறும்பு
சின்ன	சின்னம்மை, சின்னச்சம்பா
சீனி	சீனி மிளகாய், சீனி வெடி சீனியவரை
சுண்டு	சுண்டுவிரல், சுண்டெலி
திட்டி	திட்டி வாசல்
துண்டு	துண்டு வெளியீடு
நண்டு	நண்டு வண்டி
நரம்பு	நரம்புச் சிலந்தி
நரி	நரிக்கெளிறு, நரிப்பயறு

முன்னொட்டு:	எடுத்துக்காட்டு:
நாழி	நாழிக்கிணறு
பிட்டு	பிட்டுக் கருப்புக்கட்டி.
பிழுக்கை	பிழுக்கை மாணி
பிள்ளை	பிள்ளைக்கிணறு, பிள்ளைக்கோட்டை.
பூ	பூஞ்சிட்டு, பூங்குறடு
பூச்சி	பூச்சி முள்
பூனை	பூனைக் காஞ்சொறி
பெட்டி	பெட்டிக் கடை
பொடி	பொடியிழைப்புளி
மணி	மணிக்குடல், மணித்தக்காளி

இளமையைக் குறித்து வருவன :-

இள	இளநீர், இளவேனில்
கன்னி	கன்னிக்கோழி
குமரி	குமரி வாழை
குஞ்சி	குஞ்சியாச்சி
குட்டி	குட்டியப்பன்
சிறிய	சிறியதாய்
சிறு	சிறுகாலை, சிறுபிள்ளை
சின்ன	சின்னப்பாட்டி
நுழாய்	நுழாய்ப்பாக்கு
நொரு	நொருப்பிஞ்சு
பச்சை	பச்சைப்பிள்ளை
பசு	பசுங்காய், பசுங்குழவி.
பிள்ளை	பிள்ளையாண்டான், பிள்ளைப்பிறை.
பூ	பூம்பிஞ்சு, பூங்குஞ்சு
பை	பைங்கூழ்
முட்டு	முட்டுக்குரும்பை

(இருப்பு :- பாவாணரின் தமிழ் வரலாறு.)

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1. தமிழகம்.